ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2131/29 - 2019 ජූලි මස 10 වැනි බදාදා - 2019.07.10

2131/29 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதனகத்துக்குப் பின்னர் வந்துள்ள அட்டவணையின் I ஆம் II ஆம் மற்றும் III ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு அவற்றிற்கு நேரெதிர்ப் பதிவுகளில் ஏற்புடைமையாக IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உற்பத்தி வரி விகிதமானது, 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் அதே சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணை I இல் நேரொத்த பதிவுகளிலுள்ள பொருட்கள் மீது அதே அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதங்களை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, யூலை 10.*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *இ. மு. தலைப்பு* I | *இ. மு. குறியீடு* II | *விபரம்* III | *உற்பத்தித் தீர்வை* IV |
|---|---|---|---|
| **24.02** | | **புகையிலையிலான அல்லது புகையிலைக்குப் பதிலானவையிலான சுருட்டுக்கள், செருட்கள், சிகாரில்லோக்கள், சிகரெட்கள் என்பன** | |
| | *2402.20.40* | *சிகரெட்டுகள் ஒவ்வொன்றும் 67 மி. மீற்றருக்கு மேற்பட்ட நீளமுடைய ஆனால் 72 மி. மீற்றருக்கு மேற்படாத நீளத்தைக் கொண்டவை* | *1,000 சிகரெட்டு கூறுகளுக்கு ரூபா 37,600/-* |

*07-898*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.